**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்**

**முன்னிலை : B.ராஜா, பி.ஏ., பி.எல்.,**

**கூடுதல் சார்பு நீதிபதி, பழனி.**

**2026ம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் நாள் செவ்வாய்கிழமை**

**(2058 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனித்திங்கள் 16-ம் நாள்)**

**இடைநிலை மனு எண்.09/2026**

**அசல் வழக்கு எண்.110/2010**

1) சக்திவேல் (இறப்பு).

த/பெ. தங்கவேல்.

2. S. மாலதி,

க/பெ. சக்திவேல்

3. S.பிரியங்கா,

த/பெ. சக்திவேல்

4. இளவர் S.ஹர்சினி

த/பெ. சக்திவேல்

5. S.ரவி,

த/பெ. சந்தவலியான் --- மனுதாரர்கள்/2,4,5-ஆம் பிரதிவாதிகள்

(இளவர் 4-ஆம் பிரதிவாதியின் தாயாரும், 2-ஆம் பிரதிவாதி அவர்கள் மூலம்)

**/எதிர்/**

T.பூவேந்தன்,

த/பெ. தங்கப்பன் --- எதிர்மனுதாரர்/வாதி

மனுவானது இறுதியாக, கடந்த 15.06.2026-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.M.முகம்மது யூசுப் ராஜா** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.R.கிருஷ்ணன்** அவர்கள் ஆஜராகியும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த மனுக் கோப்பு

ஆவணங்கள் அனைத்தையும் கவனமாக பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்து, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

**01)** மனுதாரர்கள் தரப்பில் 05.01.2007ஆம் தேதிய பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை ஆவணம் மற்றும் 27.03.2006-ஆம் தேதிய பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஆகிய ஆவணங்களில் உள்ள 2-ஆம் மனுதாரரின் கணவரான 1-ஆம் மனுதாரரின் கையொப்பத்தை தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்தி கையெழுத்து நிபுணரின் ஆய்வு அறிக்கை பெற உத்தரவிடக்கோரி சி.பி.சி. ஆர்டர் 26 ரூல் 10(ஏ) மற்றும் பிரிவு 151-ன்படியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் அசல் வழக்கில் 5-ஆம் பிரதிவாதி. எதிர்மனுதாரர்/வாதி, 2 முதல் 5 பிரதிவாதிகளின் மீது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் 2-ஆம் பிரதிவாதி விரிவான எதிர்வழக்குரையும், கூடுதல் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிர்வழக்குரையில் 05.01.2007-ஆம் தேதிய கிரைய உடன்படிக்கையில் உள்ள கையெழுத்து 2-ஆம் மனுதாரர்/2ஆம் பிரதிவாதியின் கணவரான சக்திவேல் அவர்களுடையது அல்ல. அவரால் போடப்படவில்லை. மோசடியாக வாதியால் போடப்பட்டுள்ளது என்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரரால் குறுக்கு விசாரணை செய்யும்போது, கடந்த 05.01.2007-ஆம் தேதிய பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கையில் உள்ள 4-பக்கங்களிலும் உள்ள கையெழுத்துக்கள் சக்திவேல் அவர்களுடையது அல்ல என்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 05.01.2007-ஆம் தேதிய பதிவு செய்யப்படாத கிரயை உடன்படிக்கையில் உள்ள 4 பக்கங்களிலும் உள்ள கையெழுத்துக்கள் 2-ஆம் மனுதாரரின்

கணவருடையது அல்ல என்ற குறிப்பிட்டுள்ளதில், மேற்படி கிரைய உடன்படிக்கையில் கையெழுத்துக்களை 27.03.2006-ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்திலுள்ள மனுதாரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட 2-ஆம் மனுதாரரின் கணவர் சக்திவேல் என்பவருடைய கையெழுத்துடன் ஒப்பீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

எனவே, மேற்படி இரு ஆவணங்களையும் நீதிமன்ற ஆணையர் மூலம் தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்தி கையெழுத்து நிபுணரின் ஆய்வு அறிக்கை பெற மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலை நிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல.

மனுதாரர்கள் கடந்த 27.03.2006-ஆம் தேதி சக்திவேல் அவர்களின் பாக சாசன பத்திரத்தில் உள்ள சக்திவேலின் கையெழுத்தையும், மேற்படி சக்திவேல் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்துள்ள கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் உள்ள கையெழுத்தையும் கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி ஒப்பீடு செய்ய வேண்டும் என்பதற்காக அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் கிரைய உடன்படிக்கையில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்தை ஆய்வு செய்ய மனு தாக்கல் செய்துள்ளது சரியல்ல.

வழக்கை நிரூபிக்கும் பொறுப்பு வாதிக்கே உள்ளது. 1-ஆம் பிரதிவாதி, வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தை தயாரித்த வழக்கறிஞர் திரு.எஸ்.ஜெயராமன் அவர்களை விசாரணை செய்தபோது, அவர் முன்னிலையில்தான் தாவா கிரைய உடன்படிக்கையில் 1-ஆம் பிரதிவாதி கையெழுத்து செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வழக்கறிஞர் கடந்த

27.03.2006-ஆம் தேதிய 1-ஆம் பிரதிவாதியின் பாகப்பிரிவினை பத்திரத்தில் இன்னாரென்று நிரூபித்தவர் என்ற வகையில் கையெழுத்து செய்துள்ளார்.

மேற்படி சாட்சியத்தின் மூலமாக தாவா கிரைய உடன்படிக்கையில் கையெழுத்திட்டது 1-ஆம் பிரதிவாதிதான் என்பது நிரூபணமாகிறது. ஆனால் பிரதிவாதிகள் வேண்டுமென்றே மேற்படி கையெழுத்தை மறுத்து வழக்காடுகிறார்கள். ஆவணத்தை எழுதிக் கொடுத்த 1-ஆம் பிரதிவாதியே வழக்கறிஞர் மூலமாக கிரைய உடன்படிககையை ஒப்புக் கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். ஒருவேளை மனுதாரர்கள் கோருவருபோல் ஆவணங்களை ஒப்பீடு செய்ய வேண்டுமென்றால் ஆவணத்தை எழுதிக் கொடுத்தவரே அதனை மறுக்கும்பட்சத்தில் மட்டுமே கையெழுத்து ஒப்பீடு செய்வற்காக நிபுணருக்கு அனுப்ப கோர இயலும்.

1-ஆம் பிரதிவாதி மேற்படி ஆவணத்தை ஒப்புக் கொண்டு பதிலறிவிப்பு கொடுத்த நிலையிலும், 1-ஆம் பிரதிவாதியின் கையொப்பத்தை சாட்சிகளின் வாயிலாக வாதி நிரூபணம் செய்த பிறகும், கிரைய உடன்படிக்கை மற்றும் பாகப்பிரிவினை ஆவணத்தில் உள்ள 1-ஆம் பிரதிவாதியின் கையொப்பத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் ஆய்வுக்கு அனுப்ப கோருவது சட்ட விரோதமானது.

மனுதாரர்கள் வழக்கை காலதாமதப்படுத்தும் எண்ணத்துடன் மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மேலும், 2 மற்றும் 4 பிரதிவாதிகள் 5-ஆம் மனுதாரர்/5-ஆம் பிரதவாதிக்கு எவ்விதமான அதிகாரமும் அளிக்காதநிலையில், மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>6. பிரச்சனைக்கான தீர்வு:-</u>

இருதரப்பிலும், ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்துள்ளது.

அசல் வழக்கானது 2-ஆம் மனுதாரரின் கணவரும், 3, 4 மனுதாரர்களின் தகப்பனாருமான சக்திவேல் என்பவருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையில் கடந்த 05.01.2007-ல் தாவா சொத்து குறித்து ஏற்பட்டுள்ள பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் அடிப்படையில், ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காகவும், 2 முதல் 4 மனுதாரர்களால் 5-ஆம் மனுதாரர் பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரத்திற்காகவும், மனுதாரர்களுக்கு எதிராக எதிர்மனுதாரரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் வழக்கு விசாரணையில் முன்னிலைப்படுத்தப்பட்டபின், மனுதாரர்கள் தரப்பு வாய்மொழி சாட்சியங்களில் 5-ஆம் மனுதாரர் பி.வா.சா.1 ஆக வழக்கில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். அதன்பின்னிட்டு, மனுதாரர்கள் தரப்பில் வேறு வாய்மொழி சாட்சியங்களை விசாரணை செய்வதற்காக வழக்கு நிலுவையில் உள்ளபோது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா சொத்து குறித்து, சக்திவேல் என்பவருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பதிவு செய்யப்படாத விற்கிரைய உடன்படிக்கை ஆவணம் வா.சா.ஆ.1 ஆக வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் மேற்படி சக்திவேல் என்பவருடையது கிடையாது என

மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில், வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்களையும், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள கடந்த 27.03.2006 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் உள்ள மேற்படி சக்திவேல் என்பவரது கையெழுத்துக்களையும் கையெழுத்து நிபுணரின் ஆய்வுக்கு அனுப்புவதற்கு அனுமதி வேண்டும் என மனுப்பரிகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எதிர்மனுதாரரால் கடந்த 02.04.2007 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மேற்படி சக்திவேலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு கடந்த 06.04.2007 தேதியிட்ட பதில் வழக்கறிஞர் அறிவிப்பை அவர் அனுப்பியுள்ளார். மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கில் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு மேற்படி சக்திவேல் என்பவரால் அனுப்பப்பட்டுள்ள வா.சா.ஆ.4 பதில் வழக்கறிஞர் அறிவிப்பில், வா.சா.ஆ.1 தாவா கிரைய உடன்படிக்கை ஆவணம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள உண்மையான ஆவணம் என ஒப்புக் கொள்ளப்பட்டு, அதன்படி தாவா சொத்தை எதிர்மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுக்க தயாராக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில், அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது, மேற்படி சக்திவேல் இறந்துள்ள காரணத்தினால் அவரது சட்டப்படியான வாரிசுகளான 2 முதல் 4 மனுதாரர்கள் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ள 5-ஆம் மனுதாரர் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே, வா.சா.ஆ.1 தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணம் உண்மையானது என மேற்படி சக்திவேல் வா.சா.ஆ.4 பதில் வழக்கறிஞர் அறிவிப்பில்

ஒப்புக் கொண்டுள்ள நிலையில், அதற்கு முற்றிலும் முரணாக வா.சா.ஆ.1-ல் உள்ள கையெழுத்துக்கள் மேற்படி சக்திவேலுடையது கிடையாது என்ற எதிர்வாதத்தை இவ்வழக்கில் முன்னிலைப்படுத்த மனுதாரர்கள் சட்டப்படியாக முரண்தடை செய்யப்பட்டுள்ளனர்.

ஆகையால், மேற்கூறியவாறு இந்நீதிமன்றத்தால் விவரிக்கப்பட்டுள்ள காரணங்களினால் மனுதாரர்களுக்கு மனுப்பரிகாரம் சட்டப்படி கிடைக்க முடியாது என முடிவு செய்யப்பட்டு, மனுப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

7. **முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30-ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

RAJA B
Digitally signed by RAJA B
Date: 2026.06.30 18:30:09 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

RAJA B
Digitally signed by RAJA B
Date: 2026.06.30 18:30:16 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**